
JOURNAL WITH
3.005 IMPACT FACTOR
SIJ TAMIL STUDIES

ISSN 2454 3993

• மலர் 3 • சிறப்பிதழ் 4 • மார்ச், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்



பதிப்பாசிரியர்கள்
திருமதி. மு. கவிதா
முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி

தொகுதி - 2

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

தமிழ்த்துறை
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அமல அன்னை நகர், தாமரைப்பாடி,
திண்டுக்கல் - 624 005.

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 4 | MARCH 2019
Shanlax International Journal of Tamil Studies
(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை,<br>புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>தாமரைப்பாடி, திண்டுக்கல் - 624 005. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 270 |

**ISSN: 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **"பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"**

# கலித்தொகையில் விளிம்பு நிலையினர்

**முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தாமரைப்பாடி.

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியம் தமிழரின் பெருமையையும், அவர்களின் வாழ்வியலையும் எடுத்துரைக்கின்றது. அவற்றை நோக்கும்பொழுது, அக்காலத்தில் வேட்டையாடும் இனக்குழுச் சமுதாயம் மறைந்து, தனிச் சொத்துரிமை உடைய சமுதாயம் தோன்றிய நிலை புலப்படும். இச்சமுதாயத்தில்தான் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு, பொருளாதாரத்தில் மேம்பட்ட மக்களால் நெருக்கடிக்கும் ஆளானர். இந்நெருக்கடிக்குள்ளான மக்களே பின்னாளில் "விளிம்பு நிலை மக்கள்" எனப்பட்டனர். பொருளாதாரத்தில் பின்தங்கியவரே விளிம்பு நிலையினர் என்ற நிலை மாறி, நாளடைவில் ஆதிக்கத்தால் ஒடுக்கப்படும் எவருமே விளிம்பு நிலையைச் சார்ந்தவராக மாற்றப்பட்டுள்ளனர். இவ்விளிம்பு நிலையினரைப் பற்றி, சங்க இலக்கியங்களில் அக நூலான கலித்தொகையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

சமூகத்தின் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கிடந்த விளம்பு நிலையினர், 'அடித்தட்டு மக்கள், அன்றாடங் காய்ச்சிகள், கலைஞர்கள், நாடோடிகள்' என்று சமூகத்தால் அடையாளப்படுத்தப்பட்டனர். இந்நிலையில்தான் 'இந்தியச் சூழலில் விளம்பு நிலை ஆய்விற்கு வித்திட்ட ரணஜித்குகா என்பவர் 1982 ஆம் ஆண்டு 'Subattern Studies-Writings on Indian History and Society' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார். அதன் பின்னரே 'விளிம்பு நிலை' என்ற கருத்தாக்கம் வளரத் தொடங்கியது. இந்தியாவில் விளிம்பு நிலை ஆய்வுகள்,

1. 1960-1982 விளிம்பு நிலை ஆய்வுகளின் முதல் தொகுதி
2. 1982-1987 விளிம்பு நிலை ஆய்வுகளின் புதிய போக்குகள்
3. 1987 முதல் இன்று வரை விளிம்பு நிலை ஆய்வுகளும் வரலாற்றியலின் புதிய போக்குகளும் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### விளிம்பு நிலையினர்

சங்க காலத்தில் நிலத்திற்கேற்ப விளிம்பு நிலையினர் பிரிக்கப்பட்டிருந்தனர். குறவர், காடர், உழவர், பரதவர், ஆறலைக் கள்வர் என்று குறிக்கப்பட்டுள்ளனர். **"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரையில்"** எனும் தொடரே விளிம்பு நிலையினர் பதிவுக்கு வித்திட்டது.

கலித்தொகையில், நிலங்களின் இயல்புக்கேற்ற விளிம்புநிலையினர், பொதுவகை விளிம்புநிலையினர் என இரு வகைகளாக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வகைகளில், கூத்தர், கோடியர், வயிரியர், பாணர், பொருநர், ஆடல்மகளிர், பாடினி, குறவன், புனவன், அகவன் மகளிர், துணங்கையர், கட்டுவிச்சி, யானைப்பாகர், தேர்ப்பாகன், ஊர்க்காப்பாளர், காலங்கணிப்போர், பள்ளியறைக்காவலர், புலைத்தி, தச்சன், கொல்லன், உழவர், உழத்தியர், அரிநர், களைஞர், களமர், பருத்திப் பெண்டிர், பரதவர், உமணர், வலைஞர், கள்ளடுமகளிர், எயினர், எயிற்றியர், ஆறலைக்கள்வர், கிணறு தோண்டுபவர், மறவர், காரோடன், கலைக் கூத்தாடுபவர்கள், கொண்டிமகளிர், பரத்தையர் முதலானோர் விளிம்புநிலை மக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**கலித்தொகையில் விளிம்புநிலையினர் அடையாளம்**

கலித்தொகையில் **'சேரிக் கிழவன் மகளேன் யான்'** (மு.க.117) என்று ஒரு **முல்லைத்** தலைவி தன்நிலை குறித்து விளக்கம் தருவதன் மூலமும், **'நீ செய்த அருளின்மை சேரியும் மறைத்தான்'** (கு.க.44), **'நம் சேரியின் போகா முடமுதிர் பார்ப்பானை'** என்று குறிஞ்சித் தோழி கூறுவதன் வழியும் குறிஞ்சி, முல்லை நில மக்கள் தம் இருப்பிடத்தை சேரி என்று குறிப்பதை அறியலாம். பரத்தையர் இருப்பிடத்தை 'சேரி' என்று **மருத நிலத்தவரும்** குறிப்பிட்டுள்ளதை,

**'சேரியால் சென்று நீசேர்ந்த இல் வினாயினன்'** (ம.க.(8)

என்ற தொடர்களின் மூலமும் அறியமுடிகின்றது. விளிம்பு நிலை மக்கள், வாழும் இருப்பிடத்தின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்ததோடு மக்கள் செய்யும் தொழில்களின் அடிப்படையிலும் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தனர்.

**மருத்துவன்**

கலித்தொகையில் இடம் பெறும் மருந்து குறித்த பதிவுகளின் மூலம் மருத்துவர் பற்றிய குறிப்பை அறியலாகும் தொடர்கள். **'அருந்துயர் ஆரஞர் தீர்க்கும் மருந்து, பகை இல் நோய், நோய் தீர்க்கும் மருந்து, மருந்து ஓவா நெஞ்சிற்கு அமிழ்தம், நோய் நாம் தணிக்கும் மருந்து, மருந்து இன்று மன்னவன் சீறின், நீ உற்ற நோய்க்கு மருந்து, வருத்த நோய் செய்து இறப்பின் அல்லால் மருந்து அல்லள், இடு தேள் மருந்தோ, மருந்து அறை கோடலின் கொடிதே, இன் உயிர் போதரும் மருத்துவர், உள் இடும்பை தணிக்கும் மருந்து, ஏதிலார் எல்லாரும் தேற்றார் மருந்து'** என்பனவாகும்.

**பாணன்**

கலித்தொகையில் பாணன் குறித்த பதிவுகளை உணர்த்தும் தொடர்கள்,

**"யாழொடும் எடுத்துச் சூழ்பல உற்ற பாணன்...**
**யாழ் தழீஇய கல்லா வாய்ப் பாணன்...**
**பண்ணினால் களிப்பிக்கும் பாணன்...**
**புகழ் பல பாடும் பாணன்..."**

என்பனவாகும்.

**பாகன்**

கலித்தொகையில் பாகனைக் குறிக்கும் தொடர்கள்,

**'வேட்டோர் திறத்து விரும்பிய நின் பாகன்,**
**கடுந்திண் தேர் பூட்டு விடாஅ நிறுத்து,**
**தேரோடும் தேற்றிய பாகன் வந்தீயான் கொல்,**
**பாகனைத் தேரோடும் விட்டு அவள் வரல் நோக்கி,**
**தேரோடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ'**

என்பனவாகும்.

**நிமித்திகன்**

'நெறி அறி செறி குறி புரிவு திரிபு அறியா அறிவன்" (38) என்று நிமித்திகனை கலித்தொகைப் பதிவு செய்கிறது.

**வினைவலர்**

கலித்தொகையில் இடம் பெறும் கருவிகளின் வாயிலாக அவைகளை உருவாக்கும் வினைஞர்களின் விளிம்பு நிலையினரை அறிவதற்கான சொற்களும் தொடர்களும்:

**"கடுவிசைக் கவணையில் கல் - (கவட்டை), புலம் கடி கவணை கடு மா கடவுறும் கோல் - (தார்க்குச்சி: சாட்டை) ஆய்கோல், வல்லவன் தைஇய வாக்கமை கடுவிசை வில், கைபுனை வல்வில் சுற்றமை வில், சுரைஅம்பு புனைமாண் மரீஇய அம்பு கழுவொடு சுடுபடை சுருக்கிய தோல் வெள்வேல், ஒளிறுவேல் நிலவுவேல் கொடுமிடல் நாஞ்சில், உழு நாஞ்சில் வலம்படு திகிரி ஏணி இழைத்தல் - (தேன் எடுக்க கண் ஏணி அமைத்தல்) பறாக் குருகு (கொல்லன் உலைமூக்கு) மீன் பிடித் தோணி மரக்கலம் தெப்பம் துறைய கலம் முந்நீர் வளி கலன்** என்பனவாகும்.

கலித்தொகையில் இடம் பெறும் இசைக் கருவிகளின் அடிப்படையில் அவற்றை உருவாக்கும் கைவினைக் கலைஞர்களை அறியும் வகையில் அமைந்த தொடர்கள்.

**"ஏழ் புணர் இன்னிசையாழ் யாழிசை கொண்ட இனவண்டு வல்லவர் யாழ்**
**நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல் சிறு வெதிர்ங் குரல் கோவலர் தீங்குழல் (புல்லாங்குழல்)**
**கடுந்துடி இசைக்குங் கோல்"**

என்பனவாகும்.

கலித்தொகையில் இடம் பெறும் கட்டில் - கதவு – முரசம் முதலானவற்றை உருவாக்கும் மரத்தால் பொருட்களை உருவாக்கும் வினைஞர்களை அறிய உதவுகின்ற தொடர்கள் பின்வருமாறு:

**கட்டில்**

**"மாசில் வண் சேக்கை படை அமை சேக்கை இலங்கு மாண் அவிர்தூவி**
**அன்ன மென் சேக்கை துலங்கு மான் மேல் ஊர்தி மெல்லணை –துணை புணர் அன்னத்தின்**
**தூவி மெல்லணை இணைபட நிவந்த நீலமென் சேக்கை"**

என்ற தொடர்கள்

**கதவு**

பொருந்து நோன் கதவு போரார் கதவம் நல் நகர் வாயில் கதவம்
அயில் திணி நெடுங் கதவு

**முரசு**

ஏமம் என்று இரங்கும் எறிமுரசம்
யாண்டோரும் தொழுதேத்தும் இரங்கிசை முரசம்
முரசு மூன்றோடு ஆள்பவர்

என்பனவாகும்.

கலித்தொகையில் இடம் பெறும் ஆடைகளின் குறிப்புகளைக் கொண்டு அவற்றை உருவாக்கும் கைவினைக் கலைஞர்களை உய்த்துணர உதவும் தொடர்கள்,

**'கலிங்கத்துள் ஒடுங்கிய மாதர், சில் பூங் கலிங்கத்தாள் ஒன்றன் கூறாடை**
**நீல நீர் ஆடை, ஈர்ந்தண் ஆடை, அம்துவர் ஆடை, விளங்கு வெண்துகில்,**
**கருந்துவர் ஆடை, நிலம் தாழ்ந்த பூங்கரை நீலம், அடிதாழ் கலிங்கம்'**

என்பனவாகும்.

கலித்தொகையில் இடம் பெறும் ஆயமோடு ஆடும் ஆட்டத்துக்குரிய பொருட்களின் பதிவின் வழி அவற்றை உருவாக்கும் கைவினைக் கலைஞர்களை உய்த்துணர ஏதுவாகும் தொடர்கள்,

**புனைவினை உருள்கலன், கவளம் அறியா கைபுனை வேழம், செல்வுறு திண் தேர், வல்லவன் தைஇய பாவை, உட்பு இயல் பாவை, பொறி செய் புனைபாவை வரிப் பந்து, எறிபந்து, சுடர்வரி வினை வாய்த்த தூதையும் பாவையும் பௌவ நீர்ச்சாய் கொழுதிப் பாவை, தாய் உயிர் பெய்த பாவை, சிறு முத்தனைப் பேணி சிறு சோறு சமைத்து, மடக்குறு மக்களோடு ஓரை அயரும், யாம் ஆடும் பாவை, "பெருமணற் பெண்ணைப் பிணர்த் தோட்டுப் பைங்குரும்பைக் குடவாய்க் கொடிப் பின்னல் வாங்கி தளரும் பெருமணித் திண் தேர்"** என்பனவாகும்.

மேலும், ஆடவருக்குரிய (சூதாட்டப் பலகை) **'வல்லுப் பலகை'** என்றும் பெண்களுக்கான ஊசல், **'தாழாது உறைக்கும் தன்தாழை வீழ் ஊசல்'** என்றும் பதிவாகியுள்ளது.

கலித்தொகையில் இடம் பெற்றுள்ள ஒப்பனைக் கலைஞர், பச்சை குத்துவோர், பூ கட்டுவோர் குறித்த பதிவுகளோடு இன்னும் பல்வேறு தொழில்களின் அடிப்படையில் விளிம்பு நிலை மக்கள் பிரிக்கப்பட்டிருந்ததை இவ்விலக்கியம் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

சங்க இலக்கிய அக நூல்களான கலித்தொகையில், விளிம்புநிலையினர் குறித்த பதிவுகள் மிகுதியாக உள்ளன. அப்பதிவுகளுக்கு இப்பாடல்களில் அமைந்துள்ள தொடர்களே சான்றுகளாகியுள்ளன என்பது இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.